**அளவைப் பிரிவு, நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் - 2015**

அளவைப் பிரிவு, நியமங்கள் மற்றும் சேவைகள் நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1995 இன் 35 ஆம் இலக்க அளவைப் பிரிவு, நியமங்கள் மற்றும் சேவைகள் அதிகாரச்சட்டத்தின் 35(5) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறித்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காட்டப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, அளவைப் பிரிவு, நியமங்கள் மற்றும் சேவைகள் நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்**

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தலின் மாதிரி சட்டகத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.2 **கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒவ்வொரு நிலையான சொத்துகளுக்குரித்தாக வெவ்வேறாக பெறுமானத்தேய்வுகணக்கொன்றும் பெறுமானத்தேய்வு ஒதுக்கீட்டுக் கணக்கொன்றும் பராமரிக்கப்பட வேண்டிய போதிலும், நிதியத்தால் உரிய சொத்துக் கணக்கிலேயே பெறுமானத் தேய்வு சீராக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்குரிய பங்களிப்பு மற்றும் உறுப்பினர் கட்டணங்களாக மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 5,310,026 தொகை மீளாய்வாண்டின் செலவினமாக காண்பிக்கப்பட்டிருந்தன.

(இ) இயந்திரக் கணக்கிலும் வாகனக் கணக்கிலும் காணப்பட்ட ரூபா 20,175,995 தொகை மற்றும் ரூபா 8,322,718 தொகையான ஆரம்ப மீதிகள் ஒன்றுக்கொன்று மாற்றி பேரேடுகளில் காண்பிக்கப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு இயந்திரக் கணக்கின் மீதி ரூபா 9,482,623 குறைத்தும் வாகனக் கணக்கின் மீதி அப்பெறுமனத்தால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

ரூபா 885,796,317 தேறிய கிரயமான நிலையான சொத்துக்களுக்காக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்றோ அல்லது விரிவான பட்டோலையோ கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

7 ஆண்டுகளை விஞ்சிய தீர்க்கப்படாத முற்பண பெறுமதி முறையே ரூபா 66,530 மற்றும் ரூபா 1,525,865 ஆக இருந்ததுடன், இம்முற்பணத்தை அறவிடுவதற்காக மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1995 இன் 35 ஆம் இலக்க அளவீட்டு அலகு நியமங்கள் மற்றும் சேவைகள் அதிகாரச்சட்டம் | |
| (i) VII ஆம் அத்தியாயத்தின் 35(2) பிரிவு | 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் நிதியத்தின் வருமானத்தில் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய 1/3 பகுதி முறையே ரூபா 8,830,977, ரூபா 54,282,268 மற்றும் ரூபா 70,882,923 என 133,996,168 அரச வருமானத்திற்கு செலவு வைக்காமல் உரிய அங்கீகாரமின்றி கட்டிட நிர்மாணத்திற்காக பயன்படுத்தப் பட்டிருந்தது. |
| (ii) 20(1)(அ) மற்றும் 37 ஆம் பிரிவு | வியாபாரத்தில் பயன்படுத்தப்படுகின்ற அனைத்து அளவை உபகரணங்களையும் வருடாந்தம் மெய்மையாய்வு செய்ய வேண்டிய போதிலும் அவ்வாறு அனைத்து உபகரணங்களும் மெய்மையாய்வு செய்யப்பட்டமையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு உரிய நடைமுறையொன்று நிதியத்தினுள் தாபிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரை வரி அதிகாரச்சட்டம் மற்றும் 2008 சனவரி 01 ஆந் திகதிய 1530/13 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரம் | பணக் கொடுப்பனவின் போது ரூபா 25,000 இற்கு மேற்பட்ட கொடுப்பனவுகளுக்காக ரூபா 25 ஆன முத்திரை வரியொன்று அறவிடப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 1997 பெப்ரவரி 03 ஆந் திகதிய 06/97 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | பதில் கடமையாற்றும் காலம் 3 மாதங்கள் கூடிய அளவிற்கு உட்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2009 மே 05 ஆந் திகதி முன்னாள் பணிப்பாளர் இளைப்பாறியதன் பின்னர் அத்திகதியிலிருந்து 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் அவ் வெற்றிடத்தை |

| | | |
|---|---|---|
| | | நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் பதில் கடமை அடிப்படையில் ஓர் உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டு உத்தியோகபூர்வ கடமை மேவுகை செய்யப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2006 திசெம்பர் 22 ஆம் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 2.1 (அ) | நிதியத்தின் வருடாந்த பாதீடு 2014 செப்தெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் தேசிய பாதீட்டுப் பணிப்பாளர் நாயகம் மற்றும் நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் இதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்காக நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 99,958,904 தொகையான மிகையொன்றாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 93,149,853 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 6,809,051 ஆன அதிகரிப்பொன்று காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் முத்திரையிடல் வைப்பு வருமானம் ரூபா 33,225,131 ஆல் அதிகரித்தமை மேற்படி அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டில் ரூபா 74,972,312 ஆன மிகை 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் தளம்பலுடன் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 99,958,904 ஆக இருந்தது. எவ்வாறாயினும் ஊழியர் ஊதியம், அரசிற்கு செலுத்திய வரி மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கருத்திற்கொள்ளும் போது 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 90,539,201 ஆன பங்களிப்பு 2012, 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 104,101,297, ரூபா 113,722,149, ரூபா 105,554,346 மற்றும் ரூபா 111,059,922 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

திறைசேரி முறிகள் முதிர்வடைவதற்கு முன்னர் மீளாய்வாண்டின் போது கழிவுடன் பணமாக்கப்பட்டதன் காரணமாக நிதியத்திற்கு இழக்கப்பட்ட வட்டி வருமானம் ரூபா 5,223,010 ஆக இருந்தது.

### 4.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

மாவட்ட உத்தியோகத்தர்களால் மெய்மையாய்வு செய்யப்பட்ட அளவை அலகுகள் மற்றும் அது தொடர்பாக அறவிடப்படுகின்ற கட்டணங்கள் தொடர்பான விபரங்கள் அந்த உத்தியோகத்தர்களால் நிதியத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவது தொடர்பில் முறையான நடைமுறையொன்று நிதியத்திடம் காணப்படவில்லை. ஆகையால் அதன் அளவீட்டு அலகு முத்திரையிடப்பட்டதன் மூலம்

பெறப்பட்ட வருமானத்தின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வில் திருப்திகொள்ள முடியாதிருந்தது.

**4.3 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிரேஷ்ட மட்டத்தில் 05 வெற்றிடங்களும் மூன்றாம் மட்டத்தில் 29 வெற்றிடங்களும் உட்பட மொத்தமாக 126 வெற்றிடங்கள் அதாவது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கையில் 37 சதவீத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் நிறுவகத்தின் நோக்கம் மற்றும் செயற்பாடுகள் முறையாக நிறைவேற்றுவதற்கு தடையொன்று காணப்படவில்லையென்பதை கணக்காய்வின் போது புறக்கணிக்க முடியாதிருந்தது.

(ஆ) சிரேஷ்ட நிலை பதவியாண பணிப்பாளர் பதவி 7 ஆண்டுகளும் 2 மாதங்களாகவும், கணக்காளர் பதவி 03 ஆண்டுகளாகவும், பிரதிப் பணிப்பாளர் பதவியும் கணக்காளர் (உள்ளகக் கணக்காய்வு) பதவிகள் 2 ஆண்டுகளாகவும், உதவிப் பணிப்பாளர் (திணைக்களமய) பதவி 6 மாதங்களாகவும் வெற்றிடமாக இருந்தது.

(இ) இரண்டாம் நிலை பதவிகளின் கீழ் எடுக்கப்படும் எம்.எஸ்.டீ கணனி பயிற்சி பதவி மற்றும் ஆய்வுகூட உதவியாளர் பதவிக்காக முறையே 20 ஊழியர்களும் 03 பேரும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும், இப்பதவிகள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்**

மீளாய்வாண்டிற்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அது வருடாந்த பாதீட்டிற்கு அமைவாக தயாரிக்கப்படாதிருந்தமையால் மீளாய்வாண்டின் செலவினங்களை பாதீட்டுடன் ஒப்பிட முடியாதிருந்தது. செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான செயன்முன்னேற்ற அறிக்கை 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கபடவில்லை

**5.2 உள்ளகக் கணக்காய்வு**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 133 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 கணக்காய்வுக் குழு**

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கணக்காய்வுக் குழுக்கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 5.4 கொள்வனவுத் திட்டம்

2015 ஆம் ஆண்டிற்காக கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் உரிய அமைச்சு மற்றும் பொது திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட வருமானத்திற்கும், செலவினத்திற்கும் மற்றும் உள்ளவாறான வருமானத்திற்கும் செலவினங்களுக்கும் இடையே 31 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான விலகல் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது திணைக்களத்தின் பதில் கடமை புரியும் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | வருமானச் செலவினக் கட்டுப்பாடு | வருமானம் மற்றும் செலவின கட்டுப்பாட்டினூடாக பாதீடு எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஆ) | சொத்துக்கள் நிர்வாகம் | நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | உள்ளகக் கணக்காய்வு | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | பதவியணியினர் நிர்வாகம் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்காமை |
| (உ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படாமை. |
| (ஊ) | கணக்கீடு | முறையாக நாட்குறிப்பு பதிவுகள் வைக்கப்படாமை மற்றும் உரிய வேலைப் பத்திரமும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமை. |
| (எ) | நிதிக் கட்டுப்பாடு | காசேடு மாதாந்தம் சமப்படுத்தப்பட்டு மீதி சரியானதென கணக்காளர் உறுதிப்படுத்தாமை. |